உளி 1 | ஓசை 41 | ஜூலை - 2020 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
அல்தாஃப் சலீம்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

முகப்பு ஓவியம் :
ஓவியர் ரவி பேலட்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

ஆண்டாள் பிரியதர்ஷினி - 4
தோழன் பிரபா - 5
கழாரம் துலாலிங்கன் - 5
மின்மினி விமலா - 6
பெருமாள் ஆச்சி - 7
சந்துரு - 8
மதுசூதன் - 9
இரா.செல்வக்குமார் - 10
சுஜய் ரகு - 11
கார்த்திகேயன் மாகா - 12
மா.காளிதாஸ் - 13
பட்டியூர் செந்தில்குமார் - 14
நுஆல் பாத்திமா - 15
வினோதன் - 16
கார்த்தி - 17
கலை - 18
சகா - 18
ஜெயாபுதீன் - 19
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - 20
சே.தண்டபானி தென்றல் - 21
சுரேஷ்பாபு ராசேந்திரன் - 22
சுஜாதா கண்ணன் - 22
நா.வே.அருள் - 23
கார்த்திக் முருகானந்தம் - 24
பெனடிக் அருள் - 24
அகதா - 24
சௌவி - 25
மதுரா - 25
கோ.லீலா - 25
அன்வர் மில்டன் - 26
ஜே.ஜே.அனிட்டா - 27
கோவை சசிகுமார் - 28
ரிஸ்கா முக்தார் - 29
பிரேம பிரபா - 30
நிலாரவி - 31
மு.முபாரக் - 31
ஆனந்த குமார் - 32
தமிழ்க்குமரன் - 33
பிரபுசங்கர் க - 34
ப.தனஞ்ஜெயன் - 34
கா.ந.கல்யாணசுந்தரம் - 35
வட்டூர் அ.கு.ரமேஷ் - 35
சுப.முத்துக்குமார் - 36
திருவேடகம் ஜெய்கணேஷ் - 37
சரண்யாசத்தியநாராயணன் - 38
கோ.ஶ்ரீதரன் - 39



அரும்பத் துவங்கியிருக்கும்
முதல் மீசையிலிருந்து
சொட்டுகிறது இன்னமும்
பால்வாசம்

இப்போதும் அறுபடாத
தொப்புள் கொடியுடன்தான்
உலவுகிறான்
உடையும் விளிம்பிலிருக்கும்
குரலுடன்

எனது அடி வயிற்றுச் சூடு தேடிய
அவனின் நேற்றுகள்
இன்று நிறைந்திருக்கின்றன
ஆண்மைப் புதிர்களால்

ஆண் உலகில்
இடம் தேடிப் புறப்பட்டதால்
எப்போதாவது நிகழ்கிறது
தாய் ஸ்பரிசம்

வலி போச்சாம்மா
அவனின் மடிச்சுகத்தில்
கரைகின்றன
வலியின் மூலக் கூறுகள்

தாயைத் தேடியவனிடம்
தேடுகிறேன் தாயுமானவனை

இப்போதெல்லாம்
எனக்கு வருகிறது உயிரோட்டம்
மகனிடமிருந்து

மகன் கர்ப்பம் சுமக்கிறான் என்னை

⇨ ஆண்டாள் பிரியதர்ஷினி



இப்போதெல்லாம்
காதல் சொல்லாமல் கொள்ளாமல்
கதவிற்கு வெளியே சென்று
கண்களை மூடிக்கொண்டு
பரிதாபமாக
நின்றுகொள்கிறது....
விடியலில்
அவிழ்த்து விட்டஆட்டுக்குட்டியாக
காதலிடம் ஓடுகிறேன்...
அது  இரு கைநீட்டி
என்னை ஏந்திக்கொள்கிறது..
காமம் போலில்லை
காதல்.

➪ **தோழன் பிரபா**

முன்னும் பின்னுமாய்
ஆண்டுகள் பல
தொலைவுள்ளக் கிளைகளில் தாவும்
மனக்குரங்கின் நம்பிக்கை
இறுக இடை பற்றிய
நிகழ்காலக் கரங்களில்
மெல்ல நகர்கிறது
பால்வெளியில் நொடிமுள்ளாய் புவி

➪ **கழாரம் துலாலிங்கன்**



புத்தக வரிகளில் இரட்சண்யம் தேடும்
ஒரு மழைப்பொழுதின் தனிமைக்கு
இதமாய் ஒலிக்கிறது சில பாடல்கள்!

கூதல் காற்றை சில்லிடும்
இசையின் நாவிதங்களில்
மழுமழுக்கிறது உயிர்!

தனித்தற்ற தனிமைப் பொழுதுகளில்
மலரும் வார்த்தைகளின் மேல்
தேன்பூசும் பல நினைவுகள்!

கடிவாளமற்ற காட்டுப்பரிக்கு
இலக்கின்கண்
குத்திட்டு நிற்கும் அலைகளில்
ஆச்சர்யங்களின் வசீகரம்!

விறுவிறுத்த காலசக்கரத்தின்
நதிமூலம் தன்னில்
இப்படியாய் புறப்பாடு செய்கிறது
இன்றைய பொழுது!

முற்றும் நனைந்தவளாய்
முனுமுனுக்கும பாடல்களில்
களைகட்டுகிறது
வாழ்தலின் மந்தகாசங்கள்!

நின்று நிதானிக்க அவகாசமின்றி
வண்ணம் ஏற்றிக்கொள்கிறது
வானவில் மனது!

➪ **மின்மினி விமலா**



தாளிடப்பட்ட அறைக்குள்
தனிமையின் வாசனையை
நுகர்ந்திருக்கிறீர்களா?

அது என்னவென்று கணிக்க இயலாத
கலவையான நாற்றமது..

சோகம், கோபம், வெறுப்பு,
விரக்தி, கழிவிரக்கம், சிறுபிள்ளையின் சாயல்
கலந்த வாசனையது..

பிறர் நுகரக்கூடாதென பூட்டி வைக்கப்படும்
உணர்வுகள் சற்றே விரியும் தருணங்களில்
சுவர்களுக்குள் சலசலப்பு..

கடவுளாக, மிருகமாக, குழந்தையாக
பைத்தியமாகப் பல அவதாரங்கள் பூசும்
சுயம் மிகக் கவனமாகத் தன்னை இருளில்
மறைக்கின்றது.

மெலிதான விசும்பலுடன் கூடிய
சோகத்தின் வெளிப்பாடுகளும் காற்றுடன்
கலந்து விடுவதுண்டு..

தனிமைக்குப் பின் சுவர்கள் சற்றே இறுகிக்
கிடப்பதென்னவோ உண்மை.

➪ பெருமாள் ஆச்சி

# மேலும் கீழுமாய்



பிணத்துக்கு பறையடிக்கும்
மயானத்தொழிலாளிக்கும்
சாமிக்கு மணியடிக்கும்
கோயில் பூசாரிக்கும்
வித்தியாசம் பெரிதாய்
இருப்பதில்லை...
முன்னவன்
பிணம் விழும் நாளுக்காகவும்...
பின்னவன்
நேர்த்திக்கடன் செலுத்துபவனுக்காகவும்
தேவைகளினடிப்படையிலேயே
காத்துக்கொண்டிருக்கிறார்கள்...!
ஆனாலும்...
பிணம் புதைத்து முடித்தவன்
உழைப்புக் கூலியை
அடிமையின் விரல்களால்
யாசித்துப் பெறவே
நிர்பந்திக்கப்படுகிறான்

சூடம் எரிப்பவன்
யாசகனின் உள்ளக்கிடக்கையுடன்
தட்டேந்தி வந்தாலும்
தனக்கான கூலியை
எஜமானனின் கம்பீரத்துடனே
எப்போதும்
ஏந்திச் செல்கிறான்...
காத்திருப்புகளின் முடிவுகள்
எல்லோருக்கும்
ஒரே சுவையை அளிப்பதில்லை...
கூடுதல் உழைப்பை செலுத்தியவன் குனிந்தும்
பணிந்தும்
குறைத்து உழைத்தவன்
நிமிர்ந்து நின்றும்
தனக்கானதை
பெற்றுக்கொள்கிறார்கள்...
பிரேதமெரிப்பவனுக்கு
தீட்டுச்செலவாக
முகஞ்சுளிக்கபட்டும்
கற்பூரம் எரிப்பவனுக்கு
கடவுளின் ஒளிவட்டத்துடனும்
உருப்பெற்றுவிடுகின்றது
உழைப்புக்கூலி...!
மேல்... கீழ்.....இடை நிலைகளென
நினைத்தபடி
ஆளுக்கொரு வேடம் கட்டியாடும்
பொம்மலாட்டத்திரையில்
சம நிலையற்று பின்னப்பட்ட
சூட்சுமக்கயிறுகளை
ஆட்டுவிப்பவனாய்
தங்களையே
பாவித்துக்கொண்டு
கீழும் மேலுமாய்
ஆளுக்கொரு திசையில்
ஆடிக்கொண்டிருக்கிறது
சாதியின் பாத்திரங்கள்...!

➪ சந்துரு

ஒரு வாலிபன் நீந்திக்கொண்டிருந்தான்.
ஒன்றிரண்டு பேர் கால் நனைத்தனர்.
வயதானவர்களில் சிலர் வாழ்க்கையைத்
திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.
ஒரு பித்துப் பிடித்தவன்
வானத்துக்கும் கடலுக்குமான தூரத்தை விரல்
விட்டு எண்ணிக் கொண்டிருந்தான்.
தொப்பியணிந்த காதலர்கள் இன்னும்
முத்தங்களை ஆரம்பிக்கவில்லை.
கண்டும் காணாமல் கடந்த இளவயதுக்காரன்
புன்னகையை தவற விட்டுப்போனான்.
காம்புகளை துழாவிக் கொண்டிருந்தது ஒருத்தி
மடியில் கிடந்த குழந்தை.
ஒருவர் நரகத்துக்கும் சொர்க்கத்துக்கும்
இடைப்பட்ட தூரத்தை விளக்கிக்
கொண்டிருந்தார்.
நான்கைந்து பேர் ஒரு புரியாத கவிதையை
புரிந்து கொள்ள ஆரம்பித்தனர்.
கடலோரம் நடப்பவர்கள்
அன்றாடக் குழப்பங்களை
கடல் நீரில் அலசிக் கொண்டிருந்தனர்.
கட்டிய மணல் வீட்டைக் கலைத்துக் கலைத்துக்
கட்டிக்கொண்டிருந்தான் சிறுவன்.
இதை எல்லாம் கவனித்து பின் மணல் சரிவில்
நரைத்த மீசையொதுக்கி
காலத்தின் சொடுக்குகளை
கைப்பையில் போடும்
அந்த வயோதிகன் நானாகவும் இருக்கக்கூடும்.

⇨ மதுசூதன்





அந்த தெருவைத் தோண்டிக்
கொண்டிருந்தார்கள்
அழுக்கைத் தின்னும் மீனாய் அங்கேயே
ஏறக்குறைய
நாற்பதாண்டுகள் வாழ்ந்தவன் மூக்கை மூடிக்
கொள்கிறான்...

மேற்கால புற மூன்றாம் நம்பர் வீட்டின் கதவில்
கெட்ட இரத்த கவுச்சி அடிப்பதாக எச்சில்
துப்புகின்றனர்...
அவள் வெள்ளை புடவையின் படர்ந்திருந்த
நகக்கீரல்களில் ஒன்று அவனுடையது
என்பதால் முந்திக்கொண்டு
தோண்ட விடாமல் மூடுகிறான்...

ஆண்டிற்கு இருமுறை மட்டுமே வந்து செல்லும்
தெருவிளக்கின் வயிற்றில் ஆந்தையின் கூடு
முற்களை மடித்து நெய்து கொண்டிருந்தது...

தெரு நாய்கள் படுத்திருந்த பள்ளத்தில்
தேங்கிய நீர் சாக்கடைகளாய்த் திரிந்து
கொண்டிருந்தது...

இரவு நேரத்தில் மௌனம் கலைக்கும்
தெருவிற்கு எல்லைகாக்கும் கருப்பன்
இல்லாதபோதும்
கோமணம் கிழவனின் ‘எவன்டா அவன்’
வீச்சில் நடுநடுங்கி போவர்...

தோண்டி எடுக்கப்பட வேண்டிய வன்
குளிர்பான கையோடு பார்வையாளனாக நிற்க
நாலுபேர் சொல்வதைப் போல்
இங்கும்
நல்லவன் ஒருவன் சீரழிக்கப்பட்டுக்
கொண்டிருந்தான்...

➪ **செந்தாரப்பட்டி இரா.செல்வக்குமார்**

# வாழ்வெனும் பனிப்பூ



நான் பனிப்பூக்களை
வெறுக்கிறேன்
அவற்றின் சுகந்தம்
நொடிப்பொழுதையும்
பாரமாக்குகின்றது
மலர்வும் பொலிவும்
முறையே
சவப்பெட்டியை
மயானப் பாதையை
பரிசளிக்கின்றன
இதனால் பனிப் பூக்களை
முற்றிலுமாக
வெறுக்கிறேன்
பனிப் பூ என்பது
வேசியின்
துரித நேரக்
காமத்தைப் போன்றது
அல்லது பயத்திலும்
நடுக்கத்திலும்
வெளியேறும்
வெண் துளிகளைப்போன்றது
இவற்றிற்கு மேலாக
என்னை ஈன்றவளோ
பனிப்பூக்களின்
ஆதி நிலம்
அல்லது
இந்த நாளைச் சோதிக்கும்
ஆழ்கனவு

➪ சுஜய்_ரகு



லட்சங்களில் சம்பாதித்தவன் இன்றைக்கு
பத்து ரூபாய் முறுக்கு பாக்கெட்டுகளை
மிதிவண்டியில் சுமந்து விற்கும் போது ஒட்டு
மொத்த பணத்தையும் கொடுத்து அந்த
மிதிவண்டி முறுக்குகளை வாங்க தோன்றுகிறது
நமக்கு

தொழில்முறை குடிகாரனாக இருந்தவனுக்கு
இன்று ஒரு 110 ரூபாய் குவாட்டரை
அன்பளிக்கையில் நம் குடலை அறுப்பது
போல இருக்கிறது அவனுடைய பதில்
“நான் குடிப்பதை விட்டு விட்டேன் எனும்போது”

நான்காவது மாடியில் நின்றுகொண்டு வடக்
கயிற்றினை வீசிக் கொண்டிருக்கிறான்
அரசு அதிகாரத்தின் கழுத்தில்

வாடகைவனத்தில் நதிப்பெருக்கின் மகிழ்ச்சியில்
வாழ்ந்தவன் ஒரு கையகல நிலத்தையும்
நட்பின் தாராளமயத்திற்குத் தானமளித்ததைப்
பழைய அமர்வுகளிலெல்லாம் வருத்தமின்றிப்
பேசிக்கடப்பான்

அணிலின் நடுமுதுகில் குறுமிளகுகளைப்
புதைத்துச் சுவைத்த காட்டில் பாடிய அவனது
இராகத்தில் ஊர்கிறது இளையவண்டு ஒன்று!

அழுகையில் முடிந்த இரசமற்ற சந்திப்பில்
விடைபெற்று வீடு வந்தபின்
பாக்கெட்டுகளைப் பிரித்தேன்
கதைகளின் ஓசை ஒவ்வொரு கடியிலும்
மகள் கடித்த முறுக்கின் தெரிப்பில் அவனது
எழுத்துகளைச் சேகரித்து வாசிக்கிறேன்
எழுதாத நாவலை எப்பொழுதும் போலவே
முதலில் தானே வாசிக்கிறேன்!

➪ **கார்த்திகேயன் மாகா**

# ஒரு நாளை நகர்த்துதல்



விழித்திருந்து வரவேற்ற இந்நாள்
ஒரு பெரும் சுமையைப் போலத்
தோளில் தொங்குகிறது.

மாற்றி மாற்றிப் பிறப்பிக்கப்படும்
ஆணைகளைப் போலக்
குழப்பத்துடனேயே நெட்டி முறிக்கிறது.

விருப்பப்பட்ட பாடலின் ஊடேயான அலைபேசி
அழைப்பைப் போல அலைவரிசையை
மாற்றிக் கொண்டேயிருக்கிறது.

எந்தத் திட்டமும் இல்லாதவனின் விரக்தியை,
நவீன கவியிடமிருந்து
கொஞ்சம் மிரட்சியான வார்த்தைகளைக்
கடன் வாங்கிப் பகடி செய்கிறது.

வேகமாகச் செல்லும்
வாகனச் சக்கரத்திலிருந்து
கழன்று விழுந்த தகட்டை
லாவகமாகக் கடந்து முன்செல்கிறது.

முன்னிரவு ஒலிபரப்பு முடிந்து திரும்பும்
யுவதியின் மனதிலோடும்
கடைசிப் பாடலைக்
காமத்தோடு பின்தொடர்கிறது.

போணியாகாத மிச்சப் பழங்களோடு
வீடு திரும்பும் தள்ளுவண்டிக்காரனிடம்
பீடிப் புகையாக வெளிப்பட்டுக்
காற்றில் கலக்கிறது.

நள்ளிரவில் எழுந்து
தன் கதை முடிக்கும் ஆன்மாவைக்
காப்பாற்றும் வழிதெரியாமல் சுரங்கப்பாதைப்
பைத்தியத்தைப் போலத் தனக்குத் தானே
புலம்பிக் கொண்டு கண்ணயர்ந்து போனது
வழக்கத்துக்கு மாறான இந்நாள்.

⇨ மா. காளிதாஸ்



1
வெயிலடிக்கும் சாலையோரம்
தன் நிழலை உருட்டி கொண்டோடும்
காலி குளிர்பான புட்டி

2
அரிசி வாங்குவதற்காக
உண்டியல் பணத்தை எடுத்தேன்
தின்று பசியாறிய கரையான்கள்

3
காலி குளிர்பான குடுவை
சொருகி இருக்கும் ஸ்ட்ரா நுனியில்
மொய்க்கும் எறும்புகள்

4
மிதிவண்டி சத்தம்
தலையைத்தூக்கி குரைத்துவிட்டு
மீண்டும் உறங்கும் நாய்

5
ஏதோ ஒன்றை போதிக்கிறது
எவ்வளவு வெயிலடித்தாலும்
அதே இடத்தில் வாடி நிற்கும் செடி

6
கிணற்றை எட்டிப்பார்த்தேன்
சட்டென தலையை உள்ளிழுத்து
தண்ணீருக்குள் மூழ்கும் பாம்பு

7
வெயிலில் நடக்கிறேன்
எதிரே வீசும் காற்றில்
முகம் உணரும் குளுமை

➪ **பட்டியூர் செந்தில்குமார்**



தேசாந்திரியின் இசையில் துளிர்த்து விரிகின்றது
என் சிறகுகள்..

அவன் முகாரியில் தொலைந்திருந்து இந்த
வாழ்வின் முகவரிகள்..

எனதுயிரின் தாழ்களை திறக்கும் மாயக்கனா
அவன் விரல்களில் தவழ்ந்தது..

சரீரத்தை இயற்கையிடம் ஒப்புக்கொடுத்து
அவன் இசையில் ஆடி அசைந்து ஆசுவாசம்
கொண்டது ஆன்மா...

உடலின் ரோமங்கள் சிலிர்க்க உயிரின் பாடலை
அவன் இசைந்துக்கொண்டே இருக்கிறான்..

இந்த இரவின் ரம்மியம் அவன் குரலுக்குள்
இருந்தது..

எனதுலகின் கொடுந்தனிமையை மூங்கிலின்
காதலன் இசை தடவி வாசிக்கிறான்..

நானோ அவன் முன் யாதுமற்றிறுக்கிறேன் ..

இந்த நூற்றாண்டின்
அவன் முகமே என் ஜீவனில் மிதக்கும்
உன்னதப் பாடல்..

➪ **நுஆல் பாத்திமா**



வீடொன்றின்
வருடாந்திர வலசையின்போது
தூக்கப்பட்ட தொட்டிச்சேடிக்கு,
வேரறுந்து விடுமோ
என்றொரு பயமும்
எழுந்து அடங்கியிருக்கலாம் !

“ஏன் என்னுடன்
எழுந்து வரவில்லை” என்று
இலையில் எழுதி,
வீசிய கேள்வியை
பக்கத்துவீட்டு பலாமரம்
படித்திருக்க வாய்ப்பில்லை !

உடைபட்டதால்
தொட்டி நீக்கப்பட்டு
பூமியோடு இணைக்கப்பட்ட
ஒரு சகச்செடியின் வலி,
பெருமழையொன்றின்
வருகைக்குப்பின்
வற்றிப் போயிருக்கலாம் !

ஒரு மகிழுந்தின்
சன்னலில் தலைகாட்டும்
நாய்க்குட்டியைப்போல,
நகர்வலங்களின் போது
புன்னகை அணிகின்றன
பூக்காச் செடிகளும் !

புதிய பள்ளிக்கூடத்திற்கு
செல்ல ஆயத்தமாகும்
ஒரு மாணாக்கனுக்கே
உரித்தான பதட்டங்களை
மறைத்துகொண்டுதான்,
வேகத்தென்றலை ரசிக்கின்றன !

சாலையில் பயணிக்கும்
எந்தச் செடியை பார்த்தாலும்
ஒரு முத்தத்தை
பரிசளித்து விடுங்கள்,
நேரத்திற்கு கிடைக்கும்
நீர் மட்டுமே - ஒரு
தொட்டிவாழ்ச் செடியின்
வாழ்தலுக்கு போதுமானதில்லை !

கடந்து போகும்
தொட்டிச்செடிகளைப் பார்க்கும்
தரைவாழ் செடிகள்தான்
எளிதில் வாடிப்போகின்றன,
எந்தச் செடிக்குத்தான்
நடந்து பார்க்கும்
ஆசை இருக்காது ?!

➪ **வினோதன்**

# அரிசியில் பெயரெழுதுபவன்



நடைமேடை நிழலிடுக்கு
குறுமணல்வெளி கடற்பாதை
விழாக்கால அங்காடிவரிசை
சுற்றுலாவுக்கு வந்தவர்களிடமென
பசியாறுகிறான் அரிசிநீட்டி

கள்ளிச்செடிக்கு முள்முனை
புராதானங்களில் கல்லின்கூர்
சுவர்களுக்கு கிடக்கும்கரி
தூசிபடிந்தவைகளில் ஆள்காட்டிவிரல்
பொருளிவனுக்கு பொறுமையென்றறிக

கிழியுமென்று சுவடிகளில்
மெய்களுக்குப் புள்ளியில்லை
வளைவுகளும் கோடுகளும்
வடிவந்தப்பாது வரையுமிவன்
நேரமெடுப்பது நெற்றிப்பொட்டுக்கே

இவர்களுக்கு இதுஇதுவென்று
விதைப்பதற்கு முன்னமே
எழுதப்பட்டுவிட்டது எல்லாமென்பதால்
பெயர்களுண்டு பறவைகளுக்கும்
சோறாவதில்லை விளைந்தவையெல்லாம்

பிடிக்குமிடுக்கி இருமுனையில்
தூவலலகு எல்லையடைய
பூதஎண்ணெயில் அரிசிப்படகு
காற்றுக்குமிழ் நகர்த்தும்துடுப்பு
ஊறுமெழுத்து உருப்பெருத்து

படிகக்குப்பியோ சிறியபுட்டியோ
உறைவிடம் என்றானபின்
பிளேடும்பிசினும் வெட்டிஒட்ட
கோர்க்கப்படும் சாவிக்கொத்தில்
நீளதானியமும் நினைவுப்பொருள்

யோகக்கற்கள் மின்னும்மணிகள்
பிடித்தநிறத்தில் பூவும்சேர
கங்கணமாகவோ கழுத்துப்பாசியாகவோ
விரும்பிடாதவர் வாங்கிப்போவது
காட்சிப்பெட்டிக்கு கண்ணாடிநடுகல்

இருபெயர்கள் ஓரரிசியில்
தருவேனென்பவனைத் தாண்டுபவர்கள்
நினைவிழக்கும்வரை நினைக்குஞ்சொற்கள்
மனதிலே எழுதிவிட்டால்
தேவையில்லை மற்றெதிலும்

வெட்டுவோம் எனத்தெரிந்தும்
பிறந்தநாள் இனிப்புகளில்
எடுத்துக்கொள்ளும் என்பதறிந்தும்
தருகிறோம் அலைகளுக்கு
உடையுமோர்நாளென்றாலும்
உடைமையாக்கலாம்தான்

பட்டினியால் செத்தவனின்
வயிறுசெல்லாத வாய்க்கரிசிமேல்
வெற்றிடத்தில் வெறிகொண்டு
இவனெழுதும் பழிச்சொற்களே
நியாயத்தீர்ப்பில் கடவுளுக்கு.

⇨ **கார்த்தி**

# இறகு



காற்றின் திசைக்கேற்ப
கட்டற்றுத் திரியும்
சிறகுதிர்ந்த இறகு நான்
சொற்களற்று பாடும்
கீதம் நான்
சமரசமின்றி புயலிலும்
பயணிப்பேன்
பூங்காற்றில் மெல்ல
மேலெழுவேன்
இலக்கற்று இருப்பது
என் இலக்கல்ல
நிறையற்ற நிலையனைத்தும்
சுதந்திரம் அல்ல
இப்பூமியையும்
வானத்தையும்
கட்டற்று அளந்தறிவேன்
தென்றல் வருடும்
புயலென்னை
வீறிட்டு வீழ்த்தியடிக்கும்
இருப்பினும்
ஓய்வின்றலைவேன்
அலைக்கழிப்பும்
ஆசுவாசமும்
உயிரற்ற இவ்விறகின்
இசைந்த இயைபு

➪ **கலை**

அடுத்த வேளைச் சோற்றுக்கு
வழி தேடி நடந்தவனின்
கண்களில் பட்டுத் தொலைத்தது
இவனால் பசியாறிய நாய்
வாலாட்டியபடி...

➪ **சகா**

# காரணங்களால் பெய்கிறது மழை


© PA

ஓரமாய் அழுகிய
ஆப்பிளொன்று
தெருவில் எறியப்படும்போது பொறுக்கித்தின்று
உயிர்த்திருக்கும்
யாசகனொருவனின் சிற்றாசையொன்று
தீர்கிறது.

சிகரெட் தீத்துளி
துளைத்த
கனவானின் மேல்சட்டை
ஒரு
தெருவோரவாசியின்
புத்தாடையாகிறது.

தன்னிலை உயர்ந்த
யாரோவொரு மனிதனின்
கருணை
ஆதரவற்று வீடற்று
தெருத்தூங்கும்
சகமனிதனுக்குப்
போர்வையாகிறது.

பசித்திருக்கும்
தெருநாயின் பசித்தீயணைக்க
சிறுபிள்ளை
வாயினின்றும்
தவறிவிழுகிறது
ஒருகவளச் சோறு.

கடைமுன்னால்
அறுந்துபோன
வெள்ளைவேட்டி மனிதரின்
தோல்ச்செருப்பு
ஒருடீயையும் வடையையும்
உவந்தளிக்கிறது
செருப்புத் தைக்கும்
வயிறொட்டிய
முதியவருக்கு.

பெரும் பணக்காரனின்
திருமண நிகழ்வில்
மீதமாகும்
உயர்வகை உணவுகள்
புறநகர்
அனாதையில்லத்துக் குழந்தைகளுக்கு
ஒருவேளைக்கு
பெரு விருந்தாகிறது.

எங்கும்
எவர் நிலத்திலும்
காரணமின்றி
பொழிவதேயில்லை
நிகழ்வுப் பெருமழைகள்.

➯ **ஜெயாபுதீன்**



அவள் தாலிக்கயிறு
கழுத்து வியர்வை அழுக்குப்படியாமல்
மஞ்சள் நிறம்மாறாதிருக்கிறது...
தவறிவிழும் பயத்தோடு
ஒற்றையாய் மல்லிச்சரம் தொங்க
கணவனின் டிவிஎஸ் 100ல்
ஒருபக்கமாய் ஒடுங்கியமர்ந்து செல்கையில்
சுவரொட்டிய அட்டையென ஒட்டியபடி
பைக்குகளில் முந்திச்செல்லும் ஜோடியையும்
பின்னிய பின்கூந்தலில்
தழையத்தழைய வளையும்
கொண்டையூசி வளைவுச் சரங்களையும்
கண்ணிமைக்காமல் பார்க்கிறாள்...
இஷ்டப்பட்டொன்றும் கட்டவில்லை
அப்பாவின் கஷ்டம் தீரக் கழுத்து நீட்டும்
வழக்கமான ஒருத்திதான்...
சம்பாத்தியம் குறைவில்லையென
சம்பந்தம் பேசுமுன் தரகன் சொன்னான்
சொல்லாமல் விட்டது
பழக்கவழக்கமும் குறைவில்லையென்பதை...
இப்போதுதான் தெரிகிறது
எப்போதாவதுதான்
வேலைக்குப் போவானெனும்
இன்னுமொரு உண்மையும்...
அப்போதும்கூட
மதுக்கடை மொய் எழுதியது தாண்டி
முழுதாய் வீடு வந்து சேர்வது உறுதியில்லை
அவனும், அவன் கூலியும்...
இரவுகளில் இருள்போர்த்திய கலவி
நல்லதாகப்போனது
தனக்குப்பிடித்த ஹீரோவை
மனமொன்றி அழைக்கிறாள்
இருளோடு வருமவன் அணைக்கையில்
மூச்சுமுட்டவைக்கும் மதுநெடியில்
சட்டெனக் காணாதுபோக
ஹீரோவைத் தேடிக்களைத்தே
தினமும் துயில்கிறாள்
என்றாவது விடியும் ஆசையில்...

➪ **வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**

நாலாப்புறமும் நோக்கி வைக்கப்பட்ட
குச்சிகளில்
அலைவுறும் வளையல்கள்
உன்னையே காட்டுகின்றன

முகத்துக்கு முன்பாக
வளையல்கள் நிரம்பிய
இரு கைகளையும் மடித்து நீ உருவாக்கும்
சிம்பொனியில்
இருந்தது
காதலின் மெருகேற்றம்

பான்ஸ் பவுடரின் வாசனைமேவும்
கண்ணாடி தாங்கிய
இழைத்த மரப்பிரேமின்
உடைதலில் விடுவித்த
சிவப்பு ரசம் பூசிய கண்ணாடியை பிதாகரசிடம்
கொடுத்து முக்கோணத்தை நீட்டி நீள்
செவ்வகமாக்கினாய்

அறுந்துவிழும் ஊசல் குண்டைப்போன்ற
வளையச் சில்லுகளையும்
கலைடாஸ்கோப்பிற்குள் வைத்துக் காண்பித்தாய்

காதலின் வெகு ஆழத்தில்
கிடந்த
காலத்தின் பிரதிபலிப்புக்குள்
துண்டிட்ட முக்கோணப் பெட்டகங்களின்
சைன்தீட்டாவில்
பத்துப் பொருத்தமும்
இல்லாமல் இல்லை



➪ சே. தண்டபாணி தென்றல்

# ஜனித்தல்



இருதுளை ஈசல் புற்றின்
புது அரவ ஆசுவாசம்
நாசிக்கண் துவாரமூடே
தன்னிச்சை முதல் சுவாசம்
வீறிட்ட முதல் அழுகை
பேரானந்த ஒப்புவமை
வெட்டி பிரிக்கப்பட்ட
தாயின் சுவாச பங்கீடு
தடைபட்ட கணந்தொட்டு
நீண்ட நெடும் பந்தம்
இணைதலென்பது
முரண்பட்ட அழகியல்
நீந்த பழகுதலென்பது
பனிக்குட மிதத்தலின்
நகைமுரண்
தொப்புள்கொடியின்
இருதுருவ குருதி பிசுப்பில்
இடையீர்க்கும் தாய்மையின்
கந்தக நேர்விசை
பேறுகால நிறைதவம்
ஜனனமெனும் பெருவரம்.

➪ சுரேஷ்பாபு_ராசேந்திரன்

கிள்ளிப்பிரிக்கும்
வலிவேண்டாது
ஒடித்து வைத்ததில்

ஈர்க்கு நீங்கி
ஓர் இரவுக்குள்
உதிர்ந்து நகரும்
முருங்கை இலையென
பிரிவுகள் அமைவதில்லை
எப்போதுமே

➪ சுஜாதா கண்ணன்



பட்டப் பகலில்
நடுத் தெருவில்
எல்லோராலும் கைவிடப்பட்ட
தன் மகனின்
மரணம் மிதக்கும் கண்களை இன்னும்
மறக்க முடியாத தாய்ஞ்.
கடைத் தெருவில்
துண்டு துண்டாய் வெட்டி வீசப்பட்ட
மனைவியின் சடலம் இன்னும்
கண்ணுக்குள் நீராகி நிற்கும்
கணவன்ஞ்..
தற்கொலையின் மீது பழிபோடப்பட்டு
தண்டவாளங்களுக்கு அருகில்
கிடத்தப்பட்டு ஈக்கள் மொய்த்த
மகனின் பிணத்தை
இன்னும்
மனசுக்குள் கிடத்தியிருக்கும் தந்தைஞ்..என
கைவிடப்பட்டோரின் கரங்களைப் பற்றியபடி
இன்னும் சிலருடன் சேர்ந்து
ஆதரவற்ற அபலையாய்
வெள்ளைச் சேலையுடுத்தி
கண்ணில் கறுப்புத் துணிகட்டி
கையில்
தாழ்ந்து போன தராசுடனும்
பயன்படவே பயன்படாத ஒரு பழைய
வாளுடனும்
போய்க்கொண்டிருக்கிறாள்
ஒரு நடுவயதுப் பெண்.
யாரென்று வழிமறித்து விசாரிக்காதீர்கள்!
அப்படிக் கேட்டாலும்
உங்களால் என்ன செய்துவிட முடியும்?????

⇨ **நா.வே.அருள்**



தூக்கச் சொல்லி
கை நீட்டுகிற மரங்களை
ஏந்திக் கொள்ள,
வானத்தின் கைகளாய்
மாறிப் போகிறது
மழை...

➩ **கார்த்திக் முருகானந்தம்.**

கீச் கீச் என்கிற சத்தமும்
க்யூ க்யூ என்கிற சத்தமும்
மாறி மாறி கேட்டுக்கொண்டிருக்கும்
அந்த பெட்ஸ் ஷாப்பிற்கு
புது வீடு கட்டுவதற்காக வெட்டிய
எங்கள் பழைய வீட்டு
புளியமரத்தின் சாயல்!

➩ **பெனடிக் அருள்**

வண்ணமயமான கற்கள்
தெளிவான தண்ணீர்
பசிக்கும்போதெல்லாம் உணவு
கூடு தாண்ட எண்ணியது இல்லை
தாண்டிப்போக தோன்றியதும் இல்லை
நான் இருக்கும் மீன்தொட்டி
மிக அழகானது
என்னைப்போலவே நான் வளர்த்த மீனும்
நினைத்துக்கொண்டிருக்கும் போல

➩ **அகதா**



அதே போலொரு
மின்விசிறி சுழல்கிறது
அதே போலொரு சுவர்க்கடிகாரம்
துடித்துக்கொண்டிருக்கிறது
அதேபோலொரு சன்னல்
நட்சத்திரங்களைக் காட்டிக்கொண்டிருக்கிறது
அதேபோலொரு
கண்களைமூடிய குழல்விளக்கு
சுவற்றில் ஒட்டிக்கொண்டிருக்கிறது
அதேபோலொரு மரம்
சன்னலுக்கு வெளியே
காற்றோடு பேசிக்கொண்டிருக்கிறது
அதேபோலொரு நாட்காட்டி
தூக்குமாட்டி
படபடத்துக்கொண்டிருக்கிறது
அறை மட்டும் வேறாயிருக்கிறது..

➪ **சௌவி**

ஒவ்வொரு பறவையும்
தனக்கான
வானத்தைச்
செய்து கொள்கிறது..

➪ **மதுரா**

முறிந்த மூங்கில்
உதிர்ந்த மயிலிறகு
அழியும் காடு.

➪ **கோ.லீலா**

# வலிமிகு வாழ்க்கை...



பாரமேற்றிய
ஒற்றை மாட்டு வண்டியில்
சாலையின் மேடேறுகையில்
மூங்கில் பிரம்படி வாங்கி
வாயில் நுரை தள்ளும் மாடு...

சிறு காலதாமதத்திற்கு
மளிகைக்கடை உரிமையாளரிடம்
அறை வாங்குகிறான்
இறந்த தந்தையின் இடத்தை நிரப்பும்
வறிய சிறுவனொருத்தன்...

“தாய் தந்த பிச்சையிலே
பிறந்தேனம்மா”
என்ற பாடலை
ஈன ஸ்வரத்தில் பாடியவாறே
வீதியோரத்தில் வயிற்றைக் கழுவ
பிச்சையெடுத்துக் கொண்டிருக்கும்
குருட்டுப் பிச்சைக்காரர்கள்...

பேரம் பேசி
சுரண்டல் செய்யும் முதலாளியிடம்
ஏமாற்றம் சந்தித்த
கூலித் தொழிலாளி...

இச்சை தீர்ந்து போகையில்
வீதியில் அம்போவென விடப்பட்ட
காதல் திருமண யுவதியொருத்தி....

பெருநகரத்தின் தார்ச்சாலையில்
பாரம் ஏற்றிக்கொண்டு
மூன்று சக்கர வண்டியின் பெடலை
எழும்பி மிதித்து ஓட்டுகிறார்
முதியவர் ஒருவர்...

உச்சிவெய்யிலில் மிதிவண்டியில்
குச்சி ஐஸ் கட்டிகளை
விற்றுக் களைத்துவிட்ட
ஐஸ் விற்கும் மாமா....

முதுமைக் கால உழைப்பு
வாழ்க்கைப் பாடுகள்
காருண்யமற்ற மனிதம்
வறுமை பசி பிணி
ஏமாற்றம் சுரண்டல்
நம்பிக்கைத் துரோகமென
வலி மிகு வாழ்க்கையை
வாழ்ந்துதான் தொலைக்கவேண்டி இருக்கிறது
நாமும்
நம்மைச் சார்ந்த உயிர்களும்...

➪ அன்வர்_மில்டன்



இவன் ஆறாவது ஆள்.
இனி நான் பிழைப்பதற்கில்லை.
உயிர்க் கூட்டிலிருந்து
உடல் முழந்தாளிட்டுக் கதறியும்
ஒரு பயனுமில்லை..
செந்நீரில் கரைந்தோடும்
மன்றாடுதல்களை செவிசாய்க்க
அவர்கள் விரும்பவில்லை..
மது போத்தலின் கூர் முனையால்
கிழித்தழிக்கப்பட்ட பிறப்பின்
பிண்டத்தில் வழியும் பெண்மையின் செஞ்சாந்து
கண்ணீர் கண்டும்
அவர்களில் ஒருவரும் இரக்கப்படவேயில்லை..
ஆடையின்றிக் கிடப்பதை விடவும்
இவர்களின் ஆசையின் முன்
ஆண்மையற்றுக் கிடக்கிறேன் என்பதே
பெருவலியெனக்கு.
பாவக் கழிவுகளின் சுமையால்
வயிற்றுப் பாதையில்
சாத்தான்களின் கொம்புகள்
முளைக்கத் துவங்குகிறது.

இறுதிக் காற்றை யாசித்துக் கொண்டிருக்கிற
எனதழிவின் பொருட்டு
அவர்களிடம் கேட்டுப் பெற
ஒன்றே ஒன்று தான்.

வக்கிரச் சழக்குகளால்
விக்கித்துப் போன எனது பாவ உடலை
எனதன்னை தந்தையிடம்
காட்டி விடாதீர்கள்.

அவர்களைத் தேற்றி வாழ்வளிக்க
இன்னோர் பிள்ளை இல்லை
அவர்களுக்கு.

➪ **ஜே.ஜே.அனிட்டா**



சமூகத்தின்
வெறுமையான
பக்கங்களில்
நிறைந்து கிடக்கின்றன
கேள்விக்குறிகள்(?)

ஒன்றிற்காவது சரியான பதில்
கிடைக்குமாவெனத்
தேடுகையில்
வலி மிகுந்து
சப்தங்கள்
ஓலங்களாகின்றன

என்ன செய்வதெனத்
தெரியாமல் சுழற்சி
சுற்றியடிக்கின்றன
அவலங்கள்

முறையிடப் போகையில்
வேலியே தன்னை மேய்ந்துக்கொள்வதில்
ஒடுக்கப்படும் ஒரு
கூட்டத்தினரால்
உயிர்காக்க ஒடுகின்றோம்

மிஞ்சப்போவது
உயிரா? உடலா?
எதில் சேதமடைந்தாலும்
அழுகுரல் முனகலாய்
மட்டும் கேட்கும்
விசும்பலோடு மற்றவர்கள்
கடந்துபோகையில்
உணர்வற்ற
சடலமாக்கப்பட்டிருக்கும்
இமை மூட மறந்த
விழிகளோடு.

➪ **கோவை சசிகுமார்**



நேசத்தின் முதற் சொற்கள்
போலவேதான்
பிரிவின் முதற் சொற்களும்
யார் துவங்குவதென
வாசற்படிகளில்
தயங்கி
நிற்கின்றன..

இனி
யாரும் எந்தச்சொல்லையும் உதிர்த்திட
வேண்டாம்
யாரும் எந்த கிளையையும் முறித்திடவும்
வேண்டாம்

பிரிவு
அது நிகழட்டும்
ஒரு மெல்லிய காற்றில்
உதிர்ந்திடும்
சிறு இலை போல

நேசம்
அது இருக்கத்தானே செய்யும்
காய்ந்த இலைகள்
உதிர்ந்த பின்னே
மீண்டும் பூக்கும்
ஒரு மரம் போல!!!

➯ **ரிஸ்கா முக்தார்**

# மீண்டும் ஒரு சந்திப்பு



துளியும் திட்டமிடப்படாமலேயே
நடந்தேறி இருக்கிறது
நம் இருவரின் சந்திப்பும்
அந்த வணிகவளாகத்தில்.
பொருட்களை தள்ளு வண்டியில்
நிறைத்துக்கொண்டே
நழுவ விட்ட வருடங்களை
இருவரும் பகிர்ந்துகொள்கிறோம்.
எந்த ஒரு நிகழ்வையும்
மறந்து விடக் கூடாதென்பதில்
கூடுதல் அக்கரை
நம் இருவரிடமும் இருந்தது.
இடையிடையே வந்து போனார்கள
ஏராளமான நண்பர்கள்.
சில உச்சுக்கொட்டல்கள்,
சில ஆச்சரியங்களென
சில நெகிழ்வான நினைவூட்டலில்
நம்மை நாமே கரைத்துக்கொள்கிறோம்.
ஸீகாணாமலும் போகிறோம்.
நம் காதலுக்கு முதன் முதலாக
தூது போன மல்லிகாவுடன்
முடிவிற்கு வந்தது
அனைத்து விசாரிப்புகளும்.
உறுத்தலுடன் கேட்கிறேன்.
உன் கணவருடன் நீ மகிழ்ச்சியாகத்தானே
இருக்கிறாய் என்று.
பதிலேதும் கூறாமல்
புன்னகையுடன் மௌனமாகிறாய்.
உன் மனைவி எப்படி இருக்கிறாள்
என்ற உன் கேள்விக்கும் என்னிடம்
இருந்தது அதே மௌனம்

➪ பிரேம பிரபா



ஒரு கவிதையை வாசித்தேன்
யாரோ தனது நேசம் தொலைத்த கதையை
தனது கண்ணீர் துளிகளை
எழுத்தில்
வடித்திருந்தார்கள்
கடந்துவிடலாம் என நினைக்கையில்
கடைசியில் இருந்தது
உன் பெயர் போலிருக்க
நீயாக இருக்கக்கூடாதா
என்று நினைத்துக்கொள்கிறது
மனது.

⇨ **நிலாரவி.**

அம்மாவுக்குத் தெரியாமல்
விடுமுறை நாட்களில்,
நண்பர்களுடன்
நதிகளில் சேகரித்து
வந்த,
கூழாங்கற்கள் இன்னும்
என்னிடம் பத்திரமாக இருக்கிறது...
நதியைத் தான் காணவில்லை!

⇨ **மு.முபாரக்**



இலையில் தலைக்கறியை
முழுதாய் விட்டுப்போகும்
அப்பா மேல்
பற்றிக்கொண்டு எரியும் கோபம்..

காய்களை வரிசையாய
நறுக்கத்தெரியாவிட்டாலும்
அம்மா சொல்வது கேட்காமல்
தானே செய்வேனென்கிற
வறட்டு பிடிவாதம்...

வாரத்தில் ஒருமுறையாவது
அம்மாவிற்கு யார்
பொருட்டேனும் அறை விழுகும்..

ஞாயிற்றுகிழமைகளில்
பாசமாய் அப்பா
தங்கைக்கும் எனக்கும்
காசு கொடுத்து மாமாவுடன்
திரைப்படம் அனுப்புகையில்
அம்மா எங்களோடு வந்ததேயில்லை...

மதிப்பெண்கள் குறைந்தால்
அதிகாரத்தில் முதுகெலும்பை
உடைக்கிற படிக்காத அப்பா..

பெரிய மீசையுடன்
கைகட்டி கோடிவீட்டு
சேட்டு முன் நிற்கையில்
இருமிக்கொண்டே அம்மா
கட்டையில போகிற
கடன்காரனென்பாள்..

வெகுநாட்களுக்கு பிறகு
அம்மா டிபியென்று
மருத்துவமனையில்
அனுமதிக்கபட்ட போதுதான்
புரிந்தது.. திட்டியது
யாரையென்று..

குடித்து விட்டு வருகிற
அப்பாவைப் பார்த்து
தெருவே நடுங்கும்
அவர் உடைந்து போய்
அழுதது அம்மா
உன் இறப்பில் மட்டுமே..

சிலவருடங்களுக்கு பிறகுதான்
புரிந்தது
காதலின் அர்த்தம்..

➩ **ஆனந்த குமார்**



அது ஒரு
அழகான அதிகாலை
கிழக்கு வெளுத்து
கீழ்வானம் சிவந்து
மஞ்சள் ஒளியள்ளி பூசியிருந்தது தெருக்கள்..!

அழுக்கேறிக் கிழிந்த கைலியில்
தோளைத் தடவும் பூநூல்மீது கிடந்த
மண்வெட்டியுடன்
அவசரவசரமாக
விவசாயக் கூலிவேலைக்கு
அக்ரஹாரத்திலிருந்து
புறப்பட்டது
ஒரு கூட்டம்..!

மழமழவென
மீசை மழித்தும்
மயிருக்கென்ன குறைச்சலென
காதுவரை வளர்த்தும்
பழம்பெருமை பேசிக்கொண்டே
சாக்கடை சுத்தம்செய்ய
அரசாங்க சீருடையுடன்
ஊர்த்தெருவிலிருந்து
புறப்பட்டது
ஒரு கும்பல்..!

விலையுயர்ந்த கம்பீர ஆடையில்
கைகளில் புத்தகமேந்தி
சமத்துவம் போதிக்க
கோயிலை நோக்கி
சேரியிலிருந்து புறப்பட்டது
ஒரு குழு..!

ஆட்சியாளர்களுக்கு
மக்களை ஊடகத்தைச் சந்திக்க
எந்த பயமும் இல்லை
மக்களோடு மக்களாகவே
வாழப்பழகி இருந்தார்கள்..!

அம்மன் அக்கினி
வானம் பூமி
நதி மலையென்றெல்லாம்
பெண்ணைக் கும்பிடாமல்
சக மனுஷியென்று
சமமாகப் பார்த்து கொண்டாடினார்கள்
ஆண்கள்..!

கோயில் தேவாலயம் மசூதி இன்னும்பிற
கடவுள்களின் இல்லங்களிலெல்லாம்
கூடிக்குதூகளித்து
சுதந்திரமாய் படித்துக்கொண்டிருந்தார்கள்
குழந்தைகள்..!

இந்த கனவு கண்ட
அந்த அழுக்கான அதிகாலையில்தான்
மலக்குழி மரணம்
நான்கென்று வந்திருந்தது செய்தி..!

➪ **தமிழ்க்குமரன்**



இரட்டை தண்டவாளங்களை
அதிர்வுகளிருந்து காப்பாற்றி
கழிவுகளை சுமந்து
சுமைகளை தாங்கி
காலப்போக்கில் தேய்ந்து
மண்ணாக கரைந்து போகும்
ஜல்லி கற்களுக்குள்
கல்வெட்டாய்
அப்பாக்களின் முகம்......

⇨ **பிரபுசங்கர்_க**

நீ விட்டுச்சென்ற சொற்கள்
இன்னும் பத்திரமாக
இந்த மணல் பரப்பில்
அப்படியே இருக்கிறது
அதில் நானும்
தொலைத்துவிட்ட
என் நினைவுகளோடு
அலைகள் முன் நிற்கிறேன்
கீழே கிடந்த நம் சொற்கள்
உப்பு நீரில் முளைத்து
உப்பு சிறகை
பொருத்திக்கொண்டு
பறந்துவிட்டது திசையில்
கண்ணீர் மழையில்
முளைத்துக்கொண்டே
இருக்கிறது
நம் நினைவின் தடங்கள்.

⇨ **ப.தனஞ்ஜெயன்**



தெளிவான தோற்றப் பிழையில்
செல்லும் இடமறியாது தவிக்கிறது
மனக்காயங்களைத் கொத்தும்
சொற்களின் சூட்சுமங்கள்
பெருங்கூட்டமாய் பிறப்பெடுக்கின்றன
வன்மம் கையில் விளக்குப்பிடித்து
இரவின் பாதைகளைத் தேடுகிறது
விடியல் ஒன்றையே இலக்காக்கி
நொடிகளைத் தோணியாக்கும் கரங்கள்
காலப் படகுகளைத் தேடியபடி
கரையில் காத்திருக்கின்றன
தெளிவான தோற்றப் பிழையில்
செல்லும் இடமறியாது தவிக்கிறது
ஆளுமையில் சிக்குண்ட சிறகில்
எஞ்சியிருப்பது ஒன்றிரண்டு இறகுகளே
எங்கோ தொலைவிலிருந்து கேட்கிறது
வானம் வசப்படும் வா ....

➯ **கா.ந.கல்யாணசுந்தரம்**

துளையிட்டு
இசைகேட்கும்
செவிகளுக்கு
தெரிவதில்லை
அது என்
வலியென்று

புல்லாங்குழல்.....

➯ **வட்டூர். அ. கு ரமேஷ்**

நத்தையூர்ந்த மணல்தடத்தில்
குமிழியாய் முளைக்கின்றன
என்றோ புதைந்த முத்தங்கள்

பச்சையம் இற்ற கிளைகளில்
பிசினாய் சுரக்கிறது
ஆவியாகாத முத்தப் பொழுதுகளின் ஈரம்

கருநாக விஷத்தின் அதிதூய்மையுடன்
ஒரு முத்தம் உறைந்திருக்கிறது
படிமமாய்க் கிடக்கும் ஆதிமனிதனின்
உதடுகளில்

அருகில் இல்லாத போதில்
காற்றில் உதிர்க்கப்பட்ட முத்தங்கள்
மகரந்தம் பூசிய கால்களால்
காற்றில் வரைகின்றன உதட்டுக் கோடுகளை

இறுக்கிப்பிணைத்த விரல்களுக்கிடையில்
சத்தமின்றி கடத்தப்படுகிறது
முத்தம் ஒன்று.

பரிசுத்தமான ஒரு முத்தம்
உதடுகளில் இருக்கிறது
இன்னும் தரப்படாமலேஞ்

⇨ **சுப. முத்துக்குமார்**



திரைகடலோடி திரவியம் தேடவோ
பெண்டு பிள்ளைக்கு
பொருட்செல்வம் சேர்க்கும்
உந்துதலோ ஏதுமின்றி
மாநகரத்தின் பரபரப்புக்கு பஞ்சமற்ற
அந்த பேருந்து நிறுத்தத்தின்
ஓர் வெளியை
தத்தம் ஏகாந்தவெளியென எத்தனித்து
முன்னிரு பின்னிரு கால்களை
சாவகாசமாய் நீட்டி
துரியாதீதம் ஆழ்ந்து
பெயர் இன்னதென குறிப்பிட இயலாத
ஏதோ ஓர் பழம்பெரும் யுகத்தில்
இம்மை கலியுகம் தாண்டி
பயணித்து களிப்புறும் வேளையில்
எங்கிருந்தோ விருட்டென வந்த தானி
அதன் சிவபூசை கலைத்த கரடியாக
பரபிரம்மத்தை தனது
கிரிச் குரலில் சபித்து
அவசர அவசரமாய்
வெறுமை சூழ்ந்த நிகழ்காலத்தின்
கட்டாந்தரையில் கிடக்கும் உடலத்தில்
ஆன்மாவை நுழைக்கிறது
அந்த கறுப்புநாய்.



⇨ திருவேடகம் ஜெய்கணேஷ்



தொடர்ந்து பேசிக்கொண்டேயிரு...
அலைப்பேசி சூடிற்கும்
அடுத்தவர் வசவுக்கும்
செவி சாய்த்துவிடாதே
தொடர்ந்து பேசு..
கடவாயில் வலியையோ
காது மடல் வெடிப்பதையோ
கவனிக்காமல்
உன் பேச்சுக்கு சலிக்காமல் ம்.. கொட்டும்
என்னை மட்டுமே கவனி...
கொஞ்ச தோன்றினால்
தயங்காதே
செல்லம் தங்கமெல்லாம்
நமக்காகவே தான்...
கோபம் கொள்ள வைத்துவிட்டால்
அமைதி மட்டும் கொள்ளாதே
எதிரே எவரிருந்தாலென்ன
எரிந்து விழுந்துவிடு..
அதன் பின் கெஞ்சி கேட்கும்
என் மன்னிப்பை
இரண்டு முறை மேல் நிராகரிக்காமல்
ஏற்றுக்கொள்..
சிரி..
தோன்றினால் முத்தமிடு..
தொல்லையென்று வெட்கப்படு..
சரி நான் வைத்துவிடவாயென்று
கேட்ட பிறகும் சில நிமிடம்
தொடரு...
வேறென்னயென்று கேட்டு
பேச்சுக்கு நீ முற்றுப்புள்ளி வைக்க
முற்படும்பொழுதெல்லாம்
தேடி தொடரும் என் கதைப்பில்
காதலை தேடு..
பெரிதாய் ஒன்றுமில்லை
பேரின்பம் உன் குரல்....!

➯ சரண்யாசத்தியநாராயணன்

# மழை



உயர்தினையோ அஃறிணையோ
சூலடைந்து
சூலுடையும் சம்பவம்தான் மழை

மழை ஒரே அச்சிலிருக்க
வயது கொண்டு
அதை நாம்தான் வயது சக்கரமாய்
சுற்றி சுற்றி சிலாகிக்கிறோம்...

அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்
முரடர்களையும்
சற்றே மென்மையாக்குகிறது மழை..

மழை நனைத்ததால் தான்
ரேவதியெல்லாம் அழகு.
மற்றபடி மழையும் கூடவே ராஜா இசையும்
தனியே தங்களை ஒப்பேற்றி கொள்ளும்..

மழை பெய்யும் இரவில் தவளைகள்
மட்டுமல்ல
நாங்களும்தான்
எங்கள் மது வாயினால் மனைவியிடம்
கெடுவோம்..

ஒரு இளையராஜா பாடலும்
இரு வைப்பர் சுழலும்
நெடுஞ்சாலை பயணமும்
உங்களின் ஜாதக கட்டத்தில் ஐந்தாம்
இட புண்ணிய கிரகத்தை
பொருத்ததே...

மழை இல்லாவிடில்
ஆண் மயில் சிறகை விரிக்காது
பெண் மயிலும் மய்யல் கொள்ளாது
கவிஞர்களுக்கு காக்கைகள்தான் மிஞ்சும்...

ஈரமான தரை
லாந்தர் விளக்கு மணம்
உப்புமா காந்தல் ஊறுகாய்
பிசிரல்
வெளியில் இரைச்சலாய் மழை
எண்பதுகளின் எங்களுக்கு
சொர்க்கங்கள் பரிச்சயம்..

டிஸ்கவரியில் பார்த்த பலவித
பாம்புகள் எல்லாம் மிக பரிச்சயம்
மழை காலத்தில்.
சக மனிதர்கள் ஏனோ
சாத்திய கதவுகளுக்கு பின்...

மழை கவிதை
எழுத வேண்டுமா?
என்ன ஒரு நூறு தும்மல்தானே
வெளியில் போய் நனைந்துவிட்டுதான்
வாருங்களேன்....

➪ **கோ.ஸ்ரீதரன்**

பதிவு எண் : 521/2018

தமிழக காவல்துறை மற்றும்
படைப்புக்குழுமம் இணைந்து நடத்தும்

# மதுவிலக்கு விழிப்புணர்வு குறும்பட போட்டி-2020

## விரைவில்



போட்டி நடுவர்

இயக்குனர் **கே. பாக்யராஜ்**

**பரிசு**

**1,50,000**

கால அளவு

**8- நிமிடங்களுக்குள்**

கடைசி நாள்

**பின்னர் அறிவிக்கப்படும்**

அனுப்ப வேண்டிய முகவரி

Padaippu Media Networks, #23 Third Floor, Aarthi Arcade,
R.K. Salai, Mylapore, Chennai - 600 004